குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.88/2019

அ.சா.3

2026–ம் ஆண்டு பிப்ரவரி 24–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா | தொழில் | |
| தந்தை பெயர் | அண்ணாதுரை | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.42 மணி,

Accused Suriyamoorthi absent. Petition u/s.317 of Cr.P.C filed and allowed. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் உம்பிளிக்கம்பட்டியில் குடியிருந்து, ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு ஒருநாள், காலை 07.00 – 08.00 மணியளவில் தீவட்டிப்பட்டி ஆட்டோ ஸ்டேண்டில் இருந்தேன். அப்போது போலிசார் வந்து என்னை அழைத்து, என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். விபத்து வழக்கு சம்மந்தமாக கையெழுத்து வாங்குவதாக சொன்னார்கள். விபத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 13.09.2018 ஆம் தேதி மாலை 04.10 மணியளவில் சேலம் – தர்மபுரி சாலையில் தீவட்டிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே சாலையின் இடதுபுறம் உள்ள சர்வீஸ் சாலையில் நடேசன் என்பவர் TN 29 9255 என்ற பதிவெண் கொண்ட டி.வி.எஸ் – 50 வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றபோது, அதே சாலையில்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.02.24 17:40:50 +0530

வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எதிரி சூரியமூர்த்தி என்பவர் TN 30 AW 8688 என்ற பதிவெண் கொண்ட டாடா 909 லோடு வாகனம் அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று நடேசன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு, மேற்கண்ட சங்கதிகளை விசாரணையில் கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.48 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:40:53 +0530